**நீதித்துறை நடுவர்  விரைவு நீதிமன்றம், இரணியல்**
**முன்னிலை திரு.T.நரேந்திரகுமார், B.A., LLM.,PGDFL.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்
**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 555/2019**

## CASE SUMMARY

| | | | |
|---|---|---|---|
| **Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019** | | | |
| 1 | Case Number | | Calendar Case (CC) No.555 of 2019 |
| 2 | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Eraniel Police Station,<br>Eraniel . (Cr.No. 828/2013).<br>…..Complainant |
| 3 | Name of the Accused person | Description of the Accused | Farooq |
| 4 | Father's/Husband's Name | | son of Kabeer |
| 5 | Occupation | | -- |
| 6 | Residence of the Accused | | Manavalakurichy |
| 7 | Age and Gender | | 28/2013, Male |
| 8 | Date of Occurrence | Date of | 15.12.2013 at 15.15 hours |
| 9 | Date of Information to the Police | | 16.12.2013 at 09.00 hrs |
| 10 | Apprehension | | 27.12.2013 |
| 11 | Release on Bail | | -- |
| 12 | Period of remand of the accused | | -- |
| 13 | Filing of complaint/final report in the Court | | 08.08.2014 |
| 14 | Committal of the case to the Court of Sessions | | Nil |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 26.02.2019 | | |
| 16 | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 11.05.2026 | | |
| 17 | Examination in Chief and Cross examination of a witness | | Witness | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 11.05.2026 | -- |
| | | | P.W.2 | 11.05.2026 | -- |
| | | | P.W.3 | 01.06.2026 | -- |
| 18 | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 08.06.2026 | | |
| 19 | Closure of Trial | | 08.06.2026 | | |
| 20 | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | 22.04.2022 | 01.08.2022 |
| | | | | 18.04.2023 | 07.11.2023 |
| | | | | 26.03.2025 | 02.06.2025 |
| 21 | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22 | Sentence or Order | | முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான பாரூக், த/பெ. கபீர் என்பவர் மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 279 மற்றும் 304Aன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், மேற்படி நபரை மேற்படி குற்றச்சாட்டிகளிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1) ன் படி வழக்கிலிருந்தும் விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | Service of copy of judgment of findings on accused | | Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal. | | |
| 24 | Explanation of delay | | Delay caused due to the delay of service of summons to the Prosecution Side listed witnesses by the Prosecution. | | |
| 25 | Details of victim compensation ordered | | Nil | | |
| 26 | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition | Crl.M.P.No. | Result |
| | | | U/s 311 | 06/2026 | Allowed |
| | | | U/s 294 | 07/2026 | Allowed |

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>இரணியல் காவல் நிலையம்,<br>குற்ற எண். 828/2013 | ............ குற்றமுறையீட்டாளர், |

/எதிர்/

| | |
|---|---|
| பாரூக், (வயது 28/2013)<br>த/பெ.கபீர்,<br>சக்கப்பத்து, மணவாளக்குறிச்சி | .................. குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் இரணியலில் 08.08.2014ஆம் தேதி ஆ.ப.வ.எண்.141/2014 என்ற எண்ணாக கோப்பிற்கு எடுக்கப்பட்டு ROC No.141/2019–A dated 18.09.2019ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு 03.10.2019ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 08.06.2026ம் தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.முருகன் அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று 08.06.2026ஆம் தேதி இந்நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVIIன் கீழ் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும் பதிவிடப்படுகின்றது.

### 1. அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-

15.12.2013ம் தேதி 15.15 மணிக்கு மைலோடு ஐயப்பன் காலிமனையின் முன்பக்க ரோட்டில் வைத்து திங்கள்நகர் to அழகியமண்டபம் ரோட்டில் சித்திரை என்பவர் நடந்து இடதுபுற ஓரமாக செல்லும்போது எதிரே தெற்கிலிருந்து வடக்காக சென்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர் TN 75 K 4421 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி மேற்படி சித்திரை என்பவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து பின்தலை, முன்தலை, வலதுகால், வலதுகால் மூட்டின் கீழ், வலது இடது கண்களில் காயமும், மூக்கிலிருந்து இரத்தமும் ஏற்பட்டும், காயத்தின் கொடுரத்தால் சித்திரை என்பவர் 20.12.2013ம் தேதி 08.50 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது இ.த.ச 1860 பிரிவுகள் 279, 337 @ IPC 304–A ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று கு.வி.மு.ச.1973 பிரிவு 173(2)– ன்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக நகல் வழங்குதல் :–

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலை யானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

### 3. கு.வி.மு.ச 1973பிரிவு 240ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச1973 பிரிவு 240ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இ.த.ச.1860 பிரிவு 279 மற்றும் 304–A ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்டதில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர், தான் குற்றவாளி

இல்லை எனக்கூறி குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

4. <u>கு.வி.மு.ச1973 பிரிவு 242ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>

அரசுத்தரப்பில் அ.சா.1 கலைசெல்வன், அ.சா.2 நேசமணி, அ.சா.3 முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. புகார்தாரரான அ.சா.1 கலைசெல்வன் அவரது சாட்சியத்தில் சம்பவத்தை கேள்விபட்டது குறித்தும், புகார்மனு கொடுத்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

6. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 நேசமணி அவரது சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

7. அ.சா.3 முத்துகிருஷ்ணன் கூடுதல் சாட்சி ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி வழக்கு கோப்பை விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

8. <u>கு.வி.மு.ச 1973பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் : –</u>

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் பொய் சாட்சி என்றும், குற்றவாளி இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

10. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் : –</u>

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தங்களது தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லையென்று கூறியதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**11. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் : –</u>**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச 1860 பிரிவுகள் 279 மற்றும் 304–A –ன் கீழ் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

**12. <u>பிரச்சனைக்கான தீர்வுகள் : –</u>**

அ.சா.1 கலைசெல்வன் அவரது சாட்சியத்தில், 15.12.2013ம் தேதி மதியம் சுமார் 03.15 மணியளவில் திங்கள் நகர் – அழகியமண்டபம் நோக்கி வந்த TN 75 K 4421 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனம், அ.சா.1ன் தந்தை சித்திரை என்பவர் அழகியமண்டபத்திலிருந்து திங்கள்சந்தை நோக்கி குருசடி முன்பு நடந்து சென்றபோது, மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டதாகவும், அவரும், அவரது மாமா நேசமணி என்பவரும் அ.சா.1ன் தந்தையை மருத்துவமனையில் சேர்த்தாகவும், மேல்சிகிச்சைக்காக அவரை அனந்தபுரி மருத்துவமனையில் சேர்த்ததாகவும், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**13.** அ.சா.1ன் சாட்சியத்தின் பரிசீலினையில், அ.சா.1 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும், அவர் சம்பவத்தை கேள்விபட்டு புகார்மனு கொடுத்துள்ளதாகவும், குற்றம் சுமத்தப்பட்ட நபரை தெரியாது என்றும், மேலும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கை குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**14.** கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 நேசமணி அவரது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தெரியாது என்றும், 15.12.2013ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் மயிலோது ஆர்.சி.சர்ச் அருகே உள்ள குருசடி அருகே விபத்து நடந்ததாக கேள்விபட்டு சென்று பார்த்தபோது, அவரது மாமா சித்திரை என்பவருக்கு விபத்து ஏற்பட்டு பலத்த காயத்துடன் காணப்பட்டார் என்றும், அவரை சிகிச்சைக்காக நெய்யூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னிட்டு மேல்சிகிட்சைக்காக அனந்தபுரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும்,

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**15.** அ.சா.2ன் சாட்சியத்தின் பரிசீலினையில், குற்றம் சுமத்தப்பட்ட நபரை தெரியாது என்றும், அவர் குற்றம் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், விபத்து நடந்ததை கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு வந்ததாக சாட்சியமளித்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் அவரது சாட்சியத்தில் குற்ற சம்பவம் குறித்தோ, குற்றம் சுமத்தப்பட்ட நபர் குறித்தோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**16.** மேலும் அரசு தரப்பில் முக்கிய மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் அரசுதரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால், மற்ற சாட்சிகள் அரசு தரப்பில் தளர்வு செய்யப்பட்டு, கூடுதல் சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை தவிர்த்து வேறு சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**17.** அ.சா.3 முத்துகிருஷ்ணன் கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்ததில் இருந்து புலனாய்வு அதிகாரி வழக்கை, கோப்புக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கையின் பேரில் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து, பிரேத விசாரணை அறிக்கை, சடலக்கூறாய்வு, மோட்டார் வாகன அறிக்கை ஆகியவை பெற்று, அதன் பிறகு விசாரணை முடிக்கப்பட்டு மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளார்.

**18.** அரசுத்தரப்பில் அ.சா.3 மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரி சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம், பார்வை மகசர், பிரேத விசாரணை அறிக்கை, சடலக்கூறாய்வு அறிக்கை, மோட்டார் வாகன அறிக்கை ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். அ.சா.3ஆன காவல் அதிகாரியின் சாட்சியத்தை

மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**19. இவ்வழக்கில் விபத்தினால் சித்திரை என்பவர் இறந்துள்ளாரா என்ற சங்கதியை பொருத்து** அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.6 ஆன சடலக்கூறாய்வு அறிக்கைகளிலிருந்து சித்திரை என்பவர் இயற்கையாக அல்லாமல் விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்துள்ளார் என்பது அரசுத்தரப்பு சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**20. மேலும் இவ்வழக்கில் சித்திரை என்பவருக்கு ஏற்பட்ட மரணம் ஒரு வாகன விபத்தினால் ஏற்பட்டதா? மேற்படி விபத்திற்கு வாகனத்தின் இயந்திர கோளாறு காரணமா? என்ற சங்கதியை பொருத்து** அசாஆ.7ஆக விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், மேற்படி வாகன விபத்தானது இயந்திரக்கோளாறால் ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே இந்த வாகன விபத்தானது இயந்திரக்கோளாறால் ஏற்படவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**21. மேலும் இவ்வழக்கில் மேற்படி விபத்தை குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கவனக்குறைவு, அஜாக்கிரதை அல்லது அதிவேகமாக இயக்கி அந்த செயலால் மேற்படி சித்திரை என்பவருக்கு இறப்பு ஏற்படுத்தப்பட்டதா என்பதை பொருத்து பரிசீலனை செய்யும்போது,** அரசுத்தரப்பில் எவ்வித சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை. மேலும் அரசுதரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களில் அதுகுறித்த எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**22.** மேற்படி சாட்சியங்களிலிருந்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் அஜாக்கிரதையாகவோ, கவனக்குறைவோ அல்லது அதிவேகமாகவோ ஒரு வாகனத்தை இயக்கி அதனால் **சித்திரை** என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக அரசுத்தரப்பு அதன் சங்கதிகளை பொருத்து சந்தேகத்திற்கு இடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**23.** அரசுத்தரப்பு சாட்சியங்களில் இருந்து மேற்படி வழக்கில் இறந்து போன **சித்திரை** என்பவரின் மரணத்தை இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் இயக்கி ஏற்படுத்தினார் என்பதற்கு போதிய சான்றாவணங்களை முன்னிறுத்தவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும், மேற்படி விபத்திற்கு இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வேகமான வாகன இயக்கம் மற்றும் கவனக்குறைவுதான் காரணம் என்று அரசுத்தரப்பு **சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**24.** இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், சூழ்நிலைகளின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இதச 1860 பிரிவுகள் 279 மற்றும் 304–A ன் கீழ் குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**25.** <u>**தீர்வு:-**</u>

முடிவாக, குற்றம் சுமத்தப்பட்ட நபரான **பாரூக், த/பெ.கபீர்** என்பவர் மீதான இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவுகள் 279 மற்றும் 304(A) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி **நிரூபணம் செய்யப்படவில்லை** என்பதால், மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 பிரிவு 248(1) ன் படி வழக்கிலிருந்தும் **விடுதலை செய்தும்** தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் இவ்வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்த உத்தரவு எதுவும் கு.வி.முச 1973 **பிரிவு 452**ன் கீழ் இல்லை.

**26.** <u>**வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் உத்தரவு :–**</u>

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437–A– ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப் பத்திரமானது 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **08.06.2026** திறந்த இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.06.08 14:14:12 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.1 | – கலைசெல்வன் | 11.05.2026 | -- | புகார்மனு சாட்சி |
| அ.சா.2 | – நேசமணி | 11.05.2026 | -- | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | – முத்துகிருஷ்ணன் (உதவி ஆய்வாளர்) | 01.06.2026 | அ.சா.ஆ.1 to அ.சா.ஆ.7 | கூடுதல் சாட்சி |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.1 | 16.12.2013 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 /அ.சா.3 | 16.12.2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 /அ.சா.3 | 16.12.2013 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 /அ.சா.3 | 16.12.2013 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 /அ.சா.3 | 20.12.2013 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 /அ.சா.3 | 21.12.2013 | சடலகூறாய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.7 /அ.சா.3 | 19.12.2013 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** *:* *இல்லை*

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம்*** *: இல்லை.*

T
NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.06.08 14:14:02 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம்,

இரணியல்.

Judicial Magistrate, Fast Track Court, Eraniel

Court Seal.

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date''

**The Hon'ble High Court of Madras in Roc.No. 121910-A/2024/F1, Dated:06.05.2025**

## Cover Sheet Annexed to Judgment / Order

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Court | : | Judicial Magistrate, Fast Track Court, Eraniel. |
| 2. | Case Number | : | C.C.No.555/2019 |
| 3. | Date of Judgment of Conviction / Dismissal / Reversal of Acquittal / Dismissal of Bail Application | : | 08.06.2026<br>Acquittal |
| 4. | Name of Person Convicted / Acquittal Reversed / Bail Denied / Bail Cancelled | : | Farooq, S/o.Kabeer |
| 5. | Contact Address of Legal Aid Committee of Court Complex in which the above Court is situated. | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Court Campus, Eraniel. |
| 5a. | Designation of the person to be contacted | | The Hon'ble Chairman,<br>Taluk Legal Services Committee,<br>Eraniel. |
| 6. | Phone No. of above Legal Aid Committee (between am to pm) | | 04651-220227<br>(10.00 am to 05.45 pm) |
| 7. | Alternative Mobile No. of Legal Aid Committee | | Tmt.S.Shareen Banu<br>Junior Administrative Assistant<br>9952716394 |

T NARENDRAKUMAR

Digitally signed by T NARENDRAKUMAR
Date: 2026.06.08 14:13:50 +0530

Judicial Magistrate,
Fast Track Court, Eraniel.